RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s19101

OPEN ACCESS

# ஐங்குறுநூற்றில் சொல்லாக்கக் கோட்பாடு

செ. சுரேஷ்குமார் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி, இராசிபுரம்-637401, தமிழ்நாடு, இந்தியா

# Semantic theory in Ainkurunuru

S. Sureshkumar [a, *]

[a] Research Department of Tamil, Thiruvalluvar Government Arts College, Rasipuram-637401, Tamil Nadu, India

* Corresponding Author: ruthvakiruthish1988@gmail.com

Received: 12-08-2022
Revised: 28-10-2022
Accepted: 01-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

The Tamil language can be said to be the oldest of the world's languages. Tamil literature deals with various aspects of life. They contain a variety of literature, grammar, stories, essays, poems, proverbs, etc. Moreover, the Sangam literature depicts everyday life. From the Sangam age to the present period, a variety of writers and books have appeared. The Sangam literature consists of a large number of sections viz., Ettutthokai, Patthuppaattu, and Pathinen Kilkanakku books. Though there is Akam and Puram in the Ettutthokai of Sangam literature, in the third of Ainkurunooru ten songs to each of five thinais, that is five hundred songs are found. All of these songs were sung by different poets at different times and in different contexts. Though all the Pulavars are Tamils, they all belong to different periods. The Tamil language can vary from time to time. Therefore, the vocabulary of each scholar can vary. It was the Ettutthokai that beautifully illustrated the conditions of life of the people of the Sangam age and compiled them as well as illustrated them clearly. Moreover, the Ettutthokai volume of books has shown the true feelings of the people of the Sangam age such as valour, love, justice, benevolence, humanity, pride, and warmth. In Sangam literature, the imaginary lines about love are classified as Akam and the fields of life such as heroism, love, charity, etc., are classified as Puram.

**Keywords:** Humanity, Ainkurunuru, People, Sangam Age

## முன்னுரை

தமிழ் மொழியானது உலக மொழிகளில் மிகவும் தொன்மையானது எனக் கூறலாம். வாழ்க்கையின் பல்வேறு கூறுகளைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றது. அவற்றில் பல்வேறு வகையான இலக்கியங்கள், இலக்கணங்கள், கதை, கட்டுரை, கவிதை, பழமொழி என அனைத்தும் இடம் பெற்றுள்ளன. அதுமட்டுமல்லாமல் சங்க இலக்கியங்கள் அன்றாட வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகின்றது. சங்ககாலம் தொடங்கி இன்றைய காலகட்டம் வரையிலும் பல்வேறு வகையான எழுத்தாளர்களும், நூல்களும் தோன்றியுள்ளன.

சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்ற பெரும் பிரிவுகளைக் கொண்ட தொகை ஆகும். சங்க இலக்கிய எட்டுத் தொகையில் அகம், புறம் என்ற நூல்கள் இருப்பினும் அவற்றில் மூன்றாவதாகத் தொகுக்கப்பட்டுள்ள ஐங்குறுநூற்றில் ஐந்துதிணைகளுக்கும் பத்து பத்துப்பாடல்கள் என ஐந்நூறு பாடல்கள் அமைந்துள்ளது. இவற்றில் உள்ள பாடல்கள் அனைத்தும் வெவ்வேறு புலவர்களால் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு சூழல்களில் பாடப்பட்டவை. புலவர்கள் அனைவரும் தமிழர்களாய் இருந்தும் இவர்கள் அனைவரும்

வெவ்வேறு காலகட்டத்தைச் சார்ந்தவர்கள். தமிழ் மொழியானது காலத்திற்கேற்ப பல்வேறு வகையாக மாறக்கூடியது. எனவே ஒவ்வொரு புலவரின் சொல்லாட்சித்திறனும் மாறுபடக் கூடியது.

சங்ககால மக்களின் வாழ்வியல் நிலைகளை அழகாக எடுத்துக்கூறி அவற்றைத் தொகுத்து தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியது எட்டுத் தொகை நூல்கள் ஆகும். அதுமட்டுமல்லாமல் சங்ககால மக்களின் வீரம், காதல், நீதி, கொடை, ஈரம், பெருமிதம், உவகை போன்ற மெய்ப்பாட்டு உணர்ச்சிகளை எட்டுத் தொகைநூல்கள் எடுத்துக் காட்டியுள்ளன. சங்க இலக்கிய பாட்டுகளில் காதல் பற்றிய கற்பனை வரிகளை அகம் என்றும், வீரம், காதல், கொடை போன்ற வாழ்க்கைத் துறைகளைப் புறம் என்றும் பாகுபடுத்தி உள்ளனர்.

## அகத்திணை

அன்பின் உணர்ச்சியால் இந்த உலகம் கட்டப்பட்டு உலக வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. தொல்காப்பியத்தில் அதன் ஆசிரியர் தொல்காப்பியர். அகத்திணை இயலை ஏழுதிணைகளாக பகுத்துள்ளார். அவை கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்பனவாகும். அவற்றுள் ஒரு தலைக்காதல் எனும் கைக்கிளை, பொருந்தாகாமம். எனும் பெருந்திணை தவிர்த்த பிறஐந்து திணைகளும் காளை ஒருவனுக்கும் கன்னி ஒருத்திக்கும் இடையே முகிழ்த்து வளரும் காதல் அன்பைப் பற்றிபாடும் திணைகள் ஆகும். இந்த அன்பின் எழுச்சியால் தலைவன் தலைவியரின் உள்ளத்தே தோன்றுகின்ற இன்பமும் துன்பமும், களிப்பும் கலக்கமும் இணைந்த வாழ்வியலை இந்த ஐந்து திணைகளில் பிரித்து இலக்கியங்கள் பாடுகின்றன. அன்பானது ஆண், பெண் என்ற உறவுகளால் நிகழும் வாழ்வியல் முறையாகும். அகம் என்பது ஆணும், பெண்ணும் களவு வாழ்க்கை மேற்கொண்டு கற்பு வாழ்க்கை நடத்தி வாழும் வாழ்க்கையை மிகவும் விரிவாகப் பேசுவது ஆகும் (Subramanian, 2005).

## ஐங்குறுநூறு உள்ளடக்கம்

எட்டுத்தொகை நூல்களுள் ஐங்குறு நூறானது அகப்பொருள் சார்ந்த ஐந்திணை ஒழுக்கத்தை எடுத்துரைக்கிறது. இந்நூலின் ஒவ்வொரு திணையிலும் பத்துப்பத்துப்பாடல்கள் வீதம் "பத்து" என்றத் தலைப்புகளில் நூறுபாடல்கள் பாடப்பட்டுள்ளன. அந்தப் பாடல்களானது அகவற்பாவால் ஆனமிகக் குறைந்த 3 அடிமுதல் 6 அடிகள் கொண்ட ஐந்நூறு பாக்களுடன் விளங்குவதால் ஐங்குறுநூறு என அழைக்கப்படுகிறது (Ramasubramaniam, 2015). இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார். தொகுப்பித்தவர் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பர்.

ஐந்துநூறு பாடல்களும் "பத்து" என முடியும் தன்மை கொண்டது. இந்நூலில் கடுமான், குட்டுவன், ஆதன், அவினி, மத்தி, கொற்கைக் கோமான் முதலிய அரசர்களைப் பற்றிய குறிப்புகளும், ஆமூர், தேனூர், கொற்கை, கழார்(காவிரி), தொண்டி முதலான பெயர்களும் சுட்டப்பட்டுள்ளன. செடி, கொடி, விலங்கு, பறவைகளின் பெயர்கள் தலைப்புகளாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

## ஐங்குறுநூற்றின் சிறப்புகள்

ஐங்குறுநூற்றில் ஐந்து திணைகளையும் ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர்.

“மருதம் ஓரம்போகி, நெய்தல் அம்மூவன்

கருதும் குறிஞ்சி கபிலன்; கருதிய

பாலை ஓதலாந்தை, பனிமுல்லை பேயனே:

நூலையோ தைங்குறு நூறு"

என்னும் பாடல் உணர்த்துகிறது (Ramasubramaniam, 2015).

மருதத்தை முதல் திணையாகக் கொண்ட நூல் இதுவாகும். அது மட்டுமல்லாமல் எட்டுத் தொகையில் உள்ள அகத்திணை நூல்களுள் இவ்வாறு திணைக்கு ஒரு புலவர் வீதம் பாடுகின்ற நூல்கள் இரண்டு உள்ளன. அவற்றில் ஐங்குறுநூறு மற்றொன்று கலித்தொகை என்பது இதன் சிறப்புகளாகும்.

## திணை விளக்கம்

திணை என்பது முதற்பொருளான நிலத்தையும், மக்களின் நடவடிக்கைகளையும் குறிக்கும். திணை என்பதற்கு பிரிவு என்று பொருள். திணை என்ற சொல்லானது வீடு, நிலம், திண்ணை, இடம், குடி, குலம், ஒழுக்கம், பாடல், சூழலமைதி, ஐந்திணை ஆகிய பொருள்களில் வரும். திணை என்பதைச் சூழுல், புனைவு என்று அழைக்கலாம்.

## ஐங்குறுநூற்றில் சொல்லாக்கம்

சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை அகநூல்களில் ஒன்று ஐங்குறுநூறு ஆகும். இந்நூலில் உள்ள சொற்களைப் பல சொற்புலங்களின் கீழ்வகைப்படுத்தி ஐங்குறுநூற்றில் உள்ள தனித்தன்மையை வெளிக் கொண்டு வருவது இவ்வாய்வின் நோக்கமாகும். இந்நூலில் உள்ள கடுமான், குட்டுவன், ஆதன், அவினி, மத்தி, கொற்கைக்கோமான் முதலிய அரசர்களைப் பற்றிய குறிப்புகளையும் ஆமூர், தேனூர், கொற்கைகழார்(காவிரி), தொண்டி முதலான ஊர்ப்பெயர்களும் சுட்டப்பட்டுள்ளன. செடி, கொடி, விலங்குகள், பறவைகளின் பெயர்கள் தலைப்புகளாக அமைந்துள்ளது. ஐங்குறுநூற்றில் உள்ள அனைத்து சொற்களையும் ஒன்று சேர்த்து அவற்றின் சொற்தொகுதிகளையும் கொண்டு அதிலுள்ள சொற்களைக் காணலாம்.

தொல்காப்பியத்தில் உள்ள முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் சுட்டப்பட்டுள்ளதைப் போல நிகண்டுகள், அகராதிகள் பல்வேறு வகையான புலச் சொற்களைப் பின்பற்றியுள்ளது எனலாம். அவற்றில் முதற்பொருள் அடிப்படையில் அமைந்துள்ள பொருள் தொகுதியை நிகண்டின் அடிப்படையில் காணலாம். நிலமும் பொழுதும் - இடப்பெயர்த் தொகுதி என நிகண்டு சுட்டுகின்றது. நிலமென்பது மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை எனப் பகுத்துள்ளனர். பொழுதென்பது பெரும் பொழுது, சிறுபொழுது எனப்பிரித்துள்ளனர்.கருப்பொருள் அடிப்படையில் பலசொற்களைப் பாகுபடுத்தி புலச்சொற்கள் அமைந்துள்ளது.

" தெய்வம் உணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப

என்னும் நூற்பாவில் கருப்பொருளின் அடிப்படையில் 12 புலங்களாகப் பிரிக்கப்பட்டு அவை பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

## உயர்திணைச் சொல்லாக்கம்

ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்தில் "நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்" என அமைகின்றது. இதில் உள்ள "பாகத்து ஒருவன்" என்பது சிவனைக் குறிக்கின்றது (Subramanian, 2005). அது மட்டுமல்லாமல் சிவபெருமான் தன்னுடைய இடபாகத்தில் கொண்டுள்ள உமாதேவியையும் குறிக்கின்றது.

இலக்கண நூல்களில் அமைந்துள்ள கருப்பொருளில் தெய்வத்திற்கு அடுத்து மக்கள் என்பது இடம் பெற்றுள்ளது. எனவே தெய்வத்திற்கு அடுத்து மக்களைப் போற்றியுள்ளனர். ஐங்குறுநூற்றில் உள்ள பாடல்களில் இடம் பெறுகின்ற ஐந்து திணைகளிலும் உயர்ந்தோர், தாழ்ந்தோர் போன்ற மக்கள் சொல்லாக்கமானது மிகவும் தெளிவுபட விளக்குவதாகும்.

தலைவன், ஊரன், புலம்பன், நாடன், கொண்கன், சேர்ப்பன், சேயர், விரும்பியவள், வேட்டோள், வெய்யள், தாய், யாய், யாய் அன்னை, பகைவர், கறுத்தோர், செற்றார், வீரர், மள்ளர் உழவர், தலைவி, யாய், மெல்லியல், அந்தணர், பார்ப்பர், மலைவாழ் மக்கள் குறவர், வாத்தியக்காரர்கள், இயவர் உயர்ந்தவன், புரையோன், அஃறிணைச் சொல்லாக்கம் தொல்காப்பியர் உயிர்களை ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் எனபாகுபடுத்தியுள்ளனர். அவற்றில்புழு, ஊர்வன, பறப்பன என அனைத்து விலங்குகளையும் அஃறிணையில் அடக்குவதாகும் (Ramasubramaniam, 2015). வண்டு, தும்பி, பிரசம், மீன், கெடிறு, கெளிறு, வாளை , இறை, புலி, வயமான், வல்லியம், யானை வேழம், களிறு, எருமைக்கடா, இரும்போத்து, ஒருவகைச்செடி கரந்தை, கொட்டைக்கரந்தை, மரம் வேங்கை, வெதிரம், மலர் வீ(Ramasubramaniam, 2015)

## முடிவுரை

ஒரு மொழியில் பொதுவாக சொல்லாக்கம் என்பது பொருள் பற்றிய ஆய்வாகும். சொற்பொருள் என்பது பெரும்பாலும் சொற்றொடரியலுக்கு எதிர்மறையானது. ஏனெனில் சொற்பொருள் ஏதாவதொன்று என்ன பொருள் குறிக்கின்றது என்பதுடன் சம்பந்தப்பட்டிருக்கும் அதே வேளையில் சொற்றொடரியல், ஏதாவதொரு கருத்தை வெளிப்படுத்துகின்றதன் மூலம் முறையான சொற்களுக்கு தேவையான பொருள்களை ஒன்றாகச் சேர்த்து எழுத்து அல்லது சொற்களைக் கோர்த்து அதன் கருத்தை வெளியிடுவது ஆகும். சொல்லுக்கும், பொருளுக்கும் இடையே காணப்படும் உறவின் அடிப்படையில் சொற்த் தொகுதியை நான்கு பிரிவாக பிரிக்கப்படுகின்றது. ஒரு சொல் பலபொருள், பல சொல் ஒருபொருள், எதிர்ச்சொல், மீச்சொல் என வகைப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு வகையான சொற்கள் ஒரு சொற்த் தொகுதியைச் சேர்த்து ஒன்றாக வெளிப்படுத்துவது ஆகும்.

## References


Ramasubramaniam, V.T. (2005) Ainkurunuru, Thirumagal Nilaiyam, Chennai, India.

Subramanian, R. (2005) Kiraiyavin Tamil Agarathi, Pavai Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License